# மெட்ராஸ் உயர் நீதிமன்றம்

*அறிவிக்கை எண்.86/2019* *நாள்: 24/05/2019*

| | |
|---|---|
| அறிவிக்கை நாள் | **24/05/2019** |
| இணையதள விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | **23/06/2019** |
| வங்கி மூலம் கட்டணம் செலுத்துவதற்கான கடைசி நாள் | **25/06 /2019** |

மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் "தோட்டக்காரர்" பணிக்கு நேரடி தேர்வின் மூலம் தெரிவு செய்வதற்கு இணையதளம் வாயிலாக மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

குறிப்பு:-

*அ)* (https://www.mhc.tn.gov.in) என்ற இணையதள முகவரியின் வாயிலாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். ஏனைய முறைகளான அஞ்சல், கொரியர், பதிவுஅஞ்சல், மின்னஞ்சல் வாயிலாக வரும் விண்ணப்பங்கள் எந்தவொரு காரணத்திற்காகவும், எச்சூழ்நிலைகளிலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இது தொடர்பான எந்தக் கடிதப் போக்குவரத்தும் எந்த சூழ்நிலைகளிலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது,

*ஆ)* விண்ணப்பதாரர்கள் இணையதள விண்ணப்பத்தினை பூர்த்தி செய்வதற்கு முன்பாக, இணையதள முகவரியில் கொடுக்கப்பட்டுள்ள இந்த பதவிக்காக தரப்பட்டுள்ள அறிவிக்கை மற்றும் விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தலில்

குறிப்பிட்டுள்ளவற்றில் அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளார்களா? என்றும் அவர்களுக்கு தகுதிக்குறைவு இல்லை என்றும் உறுதியாக அறிந்த பின்னர் கவனமுடன் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்ய வேண்டும்.

இ) மேலும் விண்ணப்பதாரர் பின் நாட்களில் தகுதிகள் அற்றவர் என கண்டறியும் பட்சத்தில் அவர் உயர்நீதிமன்ற தேர்வுகளில் பங்குபெறுவதிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவர்.

2. காலி பணியிடங்கள் மற்றும் சம்பள விகிதம்

| பதவியின் பெயர் | சம்பள ஏற்றமுறை (திருத்தியமைக்கப்பட்டது) | காலிப் பணி இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| தோட்டக்காரர் | ரூ.15,700-50,000 | 24 |

3. காலி பணியிடங்களின் பகிர்வு:-

| Sl.Nos. | Category | No. of vacancies |
|---|---|---|
| 1 | GT | 1 |
| 2 | GT (PSTM) | 1 |
| 3 | GT (W) | 1 |
| 4 | GT (W)(DW) | 1 |
| 5 | GT **(PRIORITY)** | 2 |
| 6 | BC (Other than Backward Class Muslim) | 2 |
| 7 | BC (Other than Backward Class Muslim) (PSTM) | 1 |
| 8 | BC (Other than Backward Class Muslim) (W) | 1 |
| 9 | BC (Other than Backward Class Muslim) (W)(DW) | 1 |
| 10 | BC (Other than Backward Class Muslim) **(PRIORITY)** | 2 |
| 11 | BC(M) **(PRIORITY)** | 1 |
| 12 | MBC/DC | 1 |
| 13 | MBC/DC (PSTM) | 1 |
| 14 | MBC/DC(W) | 1 |
| 15 | MBC/DC(W)(DW) | 1 |
| 16 | MBC/DC **(PRIORITY)** | 1 |
| 17 | SC | 1 |

| | | |
|---|---|---|
| 18 | SC (PSTM) | 1 |
| 19 | SC(W)(DW) | 1 |
| 20 | SC **(PRIORITY)** | 1 |
| 21 | SC(A)(W) (DW) (PSTM) **(PRIORITY)** | 1 |
| | **TOTAL** | **24** |

குறிப்பு:-

விளம்பரப்படுத்தப்படும் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தோராயமானதே, தெரிவுப்பணிகள் இறுதிசெய்யப்படுவதற்குமுன், எந்த நேரத்திலும் காலி பணியிட எண்ணிக்கை குறைப்பு உட்பட எந்த மாறுதலுக்கும் உட்பட்டதாகும்.

*(4) பதவிக்கான தகுதி :*

*(அ) வயது வரம்பு (01.07.2019 அன்று உள்ளவாறு)*

| வ. எண். | வகையினம் | நிறைவடைய வேண்டிய குறைந்தபட்ச வயது | உட்பட்டிருக்க வேண்டிய அதிகபட்ச வயது |
|---|---|---|---|
| 1. | ஒதுக்கீடு வகையினருக்காக (ஆதிதிராவிட வகுப்பினர்/ஆதிதிராவிட அருந்ததியர்/பழங்குடி வகுப்பினர்/ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் & சீர் மரபினர்/பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர்) | 18 வயது | 35 வயது |
| 2. | மற்றவர்கள் (கீழ்க்கண்ட வகுப்பை சாராதவராக இருத்தல் வேண்டும். --- ஆதிதிராவிட வகுப்பினர்/ஆதிதிராவிட அருந்ததியர்/பழங்குடி வகுப்பினர்/ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் & சீர் மரபினர்/பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர்), மற்றும் பிற மாநில விண்ணப்பதாரர்கள் | 18 வயது | 30 வயது |
| 3. | பணியிலுள்ள விண்ணப்பதாரர்களுக்காக (பணியிலுள்ள விண்ணப்பதாரர்கள் என்றால்) -மெட்ராஸ் உயர்நீதி மன்ற பணி அல்லது தமிழ்நாடு நீதித்துறை அமைச்சு பணியில் முழுநேர பணியாளர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட/ அங்கீகரிக்கப்படாத தகுதி பெற்றவர் அல்லது அறிவிக்கை நாளன்று, மெட்ராஸ் உயர் நீதிமன்ற | 18 வயது | 45 வயது |

| | | | |
|---|---|---|---|
| | பணியில் "கோ-டெர்மினஸ்" ஆகப் (Co-terminus) பணி நியமனம் செய்யப்பட்டு தொடர்ந்து பணியிலுள்ள நபர் ஆவர். | | |

<u>விளக்கம்</u>

(i) விண்ணப்பதாரர்கள் *01.07.2001*-ஆம் தேதிக்கு பின்னர் பிறந்தவராக இருத்தல் கூடாது.

அ) ஒதுக்கீட்டுப் பிரிவின் கீழ்வரும் விண்ணப்பதாரர்கள், *02.07.1984*-ஆம் தேதிக்கு (ஆதிதிராவிட வகுப்பினர்/ஆதிதிராவிட (அருந்ததியர்)/பழங்குடியின வகுப்பினர்/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் & சீர் மரபினர்/பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர்) முன்னர் பிறந்திருக்கக் கூடாது.

ஆ) ஒதுக்கீட்டுப் பிரிவின் கீழ் சாராத விண்ணப்பதாரர்கள் மற்றும் பிற மாநில விண்ணப்பதாரர்கள் *02.07.1989*-ஆம் தேதிக்கு) முன்னர் பிறந்தவராக இருத்தல் கூடாது.

இ) பணியிலுள்ள விண்ணப்பதாரர்கள் *02.07.1974*-ஆம் தேதிக்கு முன்னர் பிறந்தவராக இருத்தல் கூடாது.

(ii) தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேச விண்ணப்பதாரர்கள், ஆதிதிராவிடர் அல்லது ஆதிதிராவிடர்(அருந்ததியர்) அல்லது பழங்குடியின வகுப்பினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் அந்தந்த வகுப்பை சார்ந்தவராகவே கருதப்படுவர். (தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசம் அல்லாத பிற மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தை சார்ந்த விண்ணப்பதாரர்கள் அனைவரும் பொது பிரிவினராக கருதப்படுவர். ஆகையால், பிற மாநிலத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு வயது தளர்வு,

இட ஒதுக்கீடு மற்றும் கட்டண சலுகை போன்றவை எந்த சூழ்நிலையிலும் வழங்கப்படாது. அவர்கள் குறிப்பிட்ட மாநிலத்தில் இட ஒதுக்கீடு பிரிவினராக இருப்பினும் இத்தெரிவினை பொறுத்தவரையில் பொதுப் பிரிவினராகவே கருதப்படுவர். பிற மாநில விண்ணப்பதாரர்கள் எவரேனும் அந்தந்த மாநிலத்தில் தாங்கள் ஒதுக்கீட்டுப் பிரிவை சார்ந்தவர் எனக் கோரிக்கொண்டு, விண்ணப்ப கட்டணம் செலுத்தாமல் இருந்தாலோ, அல்லது வயது வரம்பு மீறியவராயின் *(01.07.2019ம் படி 30 வயது கடந்தவர்)* அவர்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இதுதொடர்பாக எந்த கடிதப் போக்குவரத்தும் எந்தச் சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(iii) ஆதரவற்ற விதவை, மாற்றுத்திறனாளி மற்றும் முன்னாள் இராணுவத்தினருக்கு சிறப்பு வயது சலுகை எதுவும் கிடையாது.

(iv) அங்கீகரிக்கப்பட்ட தகுதிபெறாத பணியாளர்கள் அல்லது தற்கால பணியாளர்கள் அல்லது தமிழ்நாடு நீதித்துறை அமைச்சுப்பணியாளர்கள் இந்த அறிவிக்கைக்கு பின் தேதியில் தங்களது அலுவலகம் அல்லது துறைத்தலைவரிடமிருந்து பின்னிணைப்பு 'ஆ'வில் குறிப்பிடப்பட்ட படிவத்தில் தடையின்மை சான்றிதழை பெற்று அதனை உயர்நீதிமன்றம் கேட்கும் தேதியில் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்க தவறினால் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**5. தேவையான கல்வி தகுதிகள்:**

அறிவிக்கை தேதியன்று 8-ஆம் வகுப்பு அல்லது அதற்கு இணையான கல்விப் படிப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

5. <u>தேர்வுக் கட்டணம்</u>:-

| வ.எண் | வகையினம் | கட்டணம் |
|---|---|---|
| (i) | பொதுபிரிவினர்/பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர்/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ¿ சீர்மரபினர்/ மற்றவர்கள் | ரூ. 500./- |
| (ii) | ஆதி திராவிடர் (அருந்ததியர்)/ஆதி திராவிடர்/பழங்குடியினர்<br><br>(தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே கட்டண சலுகை பொருந்தும்.) | முழு விலக்களிக்கப்படுகிறது |
| (iii) | எல்லா வகுப்பைச் சார்ந்த மாற்றுத் திறனாளிகள்/ஆதரவற்ற விதவைகள்<br>அ) 40%க்கு குறையாமல் உடல்ஊனம் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி இருத்தல் வேண்டும்.<br>ஆ) ஆதரவற்ற விதவைகள் அதற்குரிய சான்றிதழை வருவாய் கோட்டாட்சியர் / துணை ஆட்சியர் / உதவி ஆட்சியரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும். | முழு விலக்களிக்கப்படுகிறது |

<u>குறிப்பு</u>

1. மேற்கண்ட கட்டண சலுகை மற்றும் இதர சலுகைகளை கோரும் விண்ணப்பதாரர்கள் தேவைப்படும் பொழுது அதற்குரிய சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும், தவறும்பட்சத்தில் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி அவர்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

2. விண்ணப்பதாரர்கள் யாரேனும் தவறான தகவலின் அடிப்படையில் விண்ணப்பித்து வயது தளர்வு/கட்டண சலுகை பெற்றிருப்பது தெரியவந்தால், அவர்களின் விண்ணப்பங்கள் எந்த நேரத்திலும் நிராகரிக்கப்படும்.

6. <u>தெரிவு செய்யும் முறைகள்</u>

கீழே கண்டபடி எழுத்துத்தேர்வு, செய்முறை தேர்வு மற்றும் வாய்மொழி தேர்வின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(i) <u>எழுத்துத்தேர்வு கொள்குறிவகை (objective type), செய்முறை தேர்வு மற்றும் வாய்மொழி தேர்வு.</u>

(அ) எழுத்துத்தேர்வு

50 கொள்குறிவகை (Objective type) கேள்விகள், ஒவ்வொன்றுக்கும் ஒரு மதிப்பெண். 75 நிமிட கால அளவு.

பகுதி அ பொது அறிவு (35 வினாக்கள்)
பகுதி ஆ பொது தமிழ் (15 வினாக்கள்)

<u>பாடத்திட்டம்</u>

<u>பகுதி அ</u> - பொது அறிவுத்திறன் நடப்பு நகழ்வுகள் உட்பட, அடிப்படை கணித திறன்கள் மற்றும் தோட்டம் அமைத்தல், நாற்றங்கால் உற்பத்தி, பூந்தோட்டம் அமைத்தல், புல்வெளி தோட்டம் அமைத்தல், மற்றும் பல.

வினாக்கள் ஆங்கிலம் மற்றும் தமிழில் அமைந்திருக்கும். (தமிழ் கேள்விகளில் முரண்பாடுகள் இருப்பின், ஆங்கில மொழியில் கேட்கப்படும் கேள்வியே சரியானதாகும்.

<u>பகுதி ஆ</u> - எட்டாம் வகுப்பு வரையுள்ள பாடத்திட்டத்தின் அடிப்படையில் பொது தமிழ் கேள்விகள் கேட்கப்படும்.

<u>செயல்முறை தேர்வு தகுதிக்கான குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்</u>

பகுதி அ 11 மதிப்பெண்கள்
பகுதி ஆ 4 மதிப்பெண்கள்

- விண்ணப்பதாரர்கள் பகுதி அ மற்றும் ஆ வில் தனித்தனியே தேர்ச்சி பெறவேண்டும்.
- செய்முறைத் தேர்வுக்கு அனுமதிக்கப்படும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை, காலி பணியிடங்களின் எண்ணிக்கையைப் போன்று 10 மடங்குக்கு மிகாமலோ அல்லது வேறு எண்ணிக்கை உயர் நீதிமன்றத்தால் ஒதுக்கீட்டு விதியைப் பின்பற்றி நிர்ணயிக்கப்படும். ஆயினும், ஒவ்வொரு ஒதுக்கீட்டுப் பிரிவிலும், அந்தந்த ஒதுக்கீட்டுப்

பிரிவுகளுக்குரிய வரம்புநிலை மதிப்பெண்களுக்கு (cut off marks) சமமான மதிப்பெண்களைப் பெறும் விண்ணப்பதாரர்கள் அனைவரும் செய்முறைத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். எழுத்துத் தேர்வில் பெறப்படும் தகுதிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் செயல்முறை தகுதிக்கான ஒரு நடைமுறைநிலை மட்டுமே ஆகும். மேலும் அதன் அடிப்படையில் மட்டுமே விண்ணப்பதாரர்கள் செயல்முறை தேர்வில் கலந்துகொள்ள உரிமை கோரமுடியாது.

- எழுத்து தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடுத்த நிலைக்கு செல்லவே பயன்படும், ஆனால் இறுதி தேர்வு பட்டியல் தயாரிக்கும் பொழுது எழுத்து தேர்வில் பெறப்பட்ட மதிப்பெண்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.
- தேர்வு நடைபெறும் இடம், தேதி, தெரிவு செய்யும் முறை மற்றும் குறைந்தபட்ச மதிப்பெண், அல்லது தகுதி அல்லது மறுகூட்டலுக்கோ மற்றும் இவ்வறிவிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள விதிகளை தளர்த்தவோ அல்லது மாற்றுவதற்கான எவ்வித வேண்டுதலும் எந்தச் சூழ்நிலையிலும் ஏற்கப்படமாட்டாது.

(ஆ) <u>செய்முறை தேர்வு (100 மதிப்பெண்கள்) (தகுதிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் 30)</u>

செய்முறைத் தேர்வில் தேர்வர்களின் நிபுணத்துவம் கீழ்கண்டவற்றின் அடிப்படையில் பரிசோதிக்கப்படும் :

(1) பல்வேறு வகையான மண் மற்றும் நிலங்களை அறிந்திருத்தல்.
(2) பல்வேறு காலநிலைகளுக்கு ஏற்ப மண் சிகிச்சை செய்தல்.
(3) பல்வேறு பூக்கள் மற்றும் தாவரங்களின் விதை விதைத்தல் மற்றும் பராமரிப்பு
(4) உரமிடுதல், விதைப்பு, பல்வேறு மலர்கள் மற்றும் தாவரங்களை நடவு

செய்தல்.

(5) தோட்டக்கலை கருவிகளின் பயன்பாடு அவற்றை கையாளுதல் மற்றும் பராமரித்தல்.

(6) பல்வேறு வகையான பூச்செண்டு தயார் செய்தல் மற்றும் தாவரத்திற்கு குழிதோண்டுதல்.

(7) கலப்பு உரங்களை பயன்படுத்தி நாற்றாங்கால் நடுதல் மற்றும் பூச்செடிகளை பதியம் போடுதல்.

(8) கத்தரித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் பற்றிய பயிற்சி.

(9) தாவர அரும்புகள், அடுக்குதல், ஒட்டுதல், வெட்டுதல், ஆகியவற்றில் பயிற்சி.

(10) புல்வெளி வளர்த்தல் மற்றும் பராமரிப்பு.

(11) பூச்செடிகள் மற்றும் பழ மரங்களை தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களை அடையாளம் காணுதல்.

(12) களை எடுத்தல், பூச்சிகொல்லி மற்றும் பூஞ்சைகொல்லி மருந்துகளின் அளவை அறிந்திருத்தல்.

(13) சரியான உபகரணங்களை பயன்படுத்தி மருந்து தெளித்தல் மற்றும் தூவுதல்.

(14) பழங்கள் மற்றும் விதைகள் பதப்படுத்துதல் பற்றிய பயிற்சி பெற்றிருத்தல்.

(15) மலர்கள் மற்றும் பழங்களை தெரிவு செய்தல், தரம் பிரித்தல் மற்றும் பொதித்தல் பற்றிய பயிற்சி பெற்றிருத்தல்.

(இ) <u>வாய்மொழி தேர்வு (10 மதிப்பெண்கள்) ((தகுதிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் 3)</u>

➢ வாய்மொழித் தேர்வுக்காக, ஒதுக்கீட்டு விதியைப் பின்பற்றி, காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை மற்றும் தகுதிப்பெற்ற விண்ணப்பதாரர்களைப் பொறுத்து 1:2 அல்லது 1:3 அல்லது மாண்புமிகு உயர் நீதிமன்றத்தால் முடிவெடுக்கப்படவுள்ளவாறான எண்ணிக்கையின் விகிதப்படி, விண்ணப்பதாரர்களின் இறுதித்தெரிவுப்பட்டியலிடப்படும்.

- நேர்முகத் தேர்வின் நோக்கமே, விண்ணப்பதாரரின் மனவிழிப்புநிலை, திறன்கள், மனப்பாங்கு, ஒழுக்கநெறி, தகவல் தொடர்பு திறன், பண்பு மற்றும் தகுதியுடைமை ஆகியவற்றை மதிப்பீடு செய்வதாகும்.

குறிப்பு:- விண்ணப்பபதாரர்களின் அனுபவ சான்றிதழின் அடிப்டையிலோ/கல்வி தகுதியின் அடிப்படையிலோ தேர்வர்கள் விண்ணப்பிக்கும் பதவிக்கு தகுதியானவர் என்று கருத இயலாது.

## 7. தெரிவு பட்டியல் தயாரித்தல்:

செய்முறை தேர்வு மற்றும் வாய்மொழி தேர்வில் விண்ணப்பபதாரர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலும் மற்றும் இடஒதுக்கீட்டு விதிமுறையை பின்பற்றியும் தேர்வானவர்களின் இறுதி பட்டியல் முடிவுசெய்யப்படும்.

## 8. பணி அமர்த்தப்படும் இடம்

தேர்வு செய்யப்படும் தேர்வர்கள் சென்னை உயர்நீதின்றத்திலோ, சென்னை உயர்நீதின்ற மதுரை கிளையிலோ அல்லது தமிழ்நாடு நீதித்துறை பயிற்சி மையம் சென்னையிலோ அல்லது தமிழ்நாடு நீதித்துறை மண்டல பயிற்சி மையங்கள் கோவை மற்றும் மதுரையிலோ பணியமர்த்தப்படுவர். மேலும் மேலே கூறப்படும் இடங்களுக்கிடையே நிர்வாகத் தேவைக்கேற்ப பணிமாற்றம் செய்யப்படுவர்.

## 9. தேர்வு நடை பெறும் இடம்

(அ) எழுத்துத் தேர்வு சென்னை மற்றும் / அல்லது உயர்நீதிமன்றம் முடிவு செய்யும் வேறு இடத்திலே நடைபெறும். அதாவது ஒதுக்கப்படும் தேர்வு மையம் எச்சூழ்நிலையிலும் மாற்றப்படமாட்டாது. இதுசம்மந்தமான விண்ணப்பங்களும் அனுமதிக்கப்படமாட்டாது.

(ஆ) செய்முறை தேர்வு மற்றும் வாய்மொழி தேர்வு சென்னையில் மட்டும் நடைபெறும். தேர்வு நடைபெறும் தேதி பற்றிய விவரம் தேர்ந்தெடுக்கப்படும் தகுதியான தேர்வர்களுக்கு உரிய நேரத்தில் தெரிவிக்கப்படும்.

(இ) எழுத்துத் தேர்வு / செய்முறை தேர்வு / வாய்மொழி தேர்வில் பங்கேற்க விண்ணப்பதாரர்களுக்கு எவ்வித பயணப்படியோ / தினப்படியோ வழங்கப்படமாட்டாது.

குறிப்பு - தமிழ் மற்றும் ஆங்கில அறிவிக்கைகளுக்கிடையே ஏதேனும் முரண்பாடுகள் இருப்பின், ஆங்கில மொழியாக்கமே இறுதியானது.

சி குமரப்பன்
தலைமை பதிவாளர்